**செய்தி வெளியீடு எண் : 431** **நாள்: 18.03.2022**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தலைமையில் ஆறு மண்டல இணை இயக்குநர்களின் ஆய்வுக் கூட்டம் இன்று (18.03.2022) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் பேசிய போது தெரிவித்ததாவது, இதுவரை ஒவ்வொரு மண்டலமாக பல ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு இன்று தாக்கல் செய்துள்ள நிதிநிலை அறிக்கையில் பல்வேறு சிறப்பான திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. இத்தகைய முன்னோடித் திட்டங்களை பொதுமக்கள் குறிப்பாக கிராமப்புற மக்கள், பெண்கள் அறிந்து கொள்ளும் வகையில் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் விளம்பரப் பணிகள் மேற்கொள்வதை மண்டல இணை இயக்குநர்கள் கண்காணித்து திடீர் ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.

நினைவகங்கள், அரங்கங்கள் மற்றும் சிலைகளை அமைப்பதற்கு மண்டல இணை இயக்குநர்கள் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களை நேரடியாக சந்தித்து, உரிய இடங்களை உனடியாகத் தேர்வு செய்து, விரைவாக அரசுக்கு அறிக்கையினை அனுப்பி வைக்க வேண்டும்.

தமிழரசு இதழ் சந்தா சேர்க்கும் பணிகள், சமூக ஊடகங்களில் விளம்பரம் மேற்கொள்ளும் பணிகள், உள்ளிட்ட அனைத்து பணிகளையும் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மேற்கொள்வதை மண்டல இணை இயக்குநர்கள் மேற்பார்வையிட்டு இலக்கினை எய்திட வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு.மகேசன் காசிராஜன் இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையுரையாற்றி பல்வேறு அறிவுரைகளை வழங்கினார்.

முன்னதாக செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்.

இக்கூட்டத்தில் கூடுதல் இயக்குநர்கள் திரு.தி.அம்பலவாணன், திரு.ச.பாண்டியன், இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மற்றும் அலுவர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**